## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2015

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டினது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கணக்கேடுகளும் பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சொத்துக்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 5,805,009,280 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 161,866,142 |
| மொத்தச் சொத்துக்கள் | 5,966,875,422 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,179,046,151 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 233,890,743 |
| மொத்தச் பொறுப்புக்கள் | 1,412,936,894 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 4,553,938,529 |
| மொத்த பொறுப்புக்கள் | 5,966,875,423 |
| மொத்த வருமானம் | 655,699,345 |
| மொத்தச் செலவினம் | 873,483,759 |
| பற்றாக்குறை | 217,784,414 |

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>(i) நிதிப் பிரமாணம் 104 மற்றும் 110 | 2013 ஆம் ஆண்டின் போது தீயினால் அழிவடைந்திருந்த ரூபா 500,000 இற்கு மேற்பட்ட இழப்பு இடம்பெற்றிருந்த கல்பிஹில்ல தொழிற்சாலை மற்றும் இயந்திராதிகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், |

சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையில் அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தோட்டத்திற்குரிய வாகனமொன்று தீ வைத்து அழிக்கப்பட்டமை தொடர்பாக இழப்பு தொடர்பான ஆரம்ப பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப அறிக்கையொன்றை தயாரிப்பதற்கும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காணுதல் மற்றும் நட்டங்கள் பதிவேட்டிற்கு உட்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 2013 சனவரி 15 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

8 தோட்டங்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 18 உத்தியோகத்தர்களும் 12 தோட்டங்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 142 தொழிலாளர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 12 தோட்டங்களில் 2014 மற்றும் மீளாய்வாண்டில் ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேயிலையின் அறுவடை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தோட்டத்தின் பெயர் | காணி அளவு (ஹெக்டேயர்) | ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை அறுவடை | | |
|---|---|---|---|---|
| | | 2015 கி.கி | 2014 கி.கி | வேறுபாடு கி.கி |
| ஓபல்கல | 104 | 605 | 633 | (28) |
| கல்பீல்ல | 235 | 641 | 629 | 12 |
| கோமர | 164 | 723 | 671 | 52 |
| ரங்கல | 215 | 698 | 549 | 149 |
| ஹாகல | 251 | 584 | 596 | (12) |
| கெலேபொக்க | 583 | 608 | 506 | (102) |
| ஹுன்னஸ்கிரிய | 208 | 590 | 469 | 121 |
| அலகொல்ல | 338 | 493 | 499 | (6) |
| மிட்லன்ட் | 259 | 466 | 448 | 18 |
| ஹெயாபார்க் | 192 | 214 | 274 | (60) |

| | | | | |
|---|---|---|---|---|
| கொட்டகஹ | 251 | 185 | 228 | (43) |
| நிக்கொலஓய | 92 | 366 | 381 | (15) |
| மொத்தம் | **2,893** | **6,173** | **5,910** | **5,883** |

(i) ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்திசெய்யப்பட்ட சராசரி நியம தேயிலை அறுவடை அண்ணளவாக 1736.5 கி.கிராம் ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அது 185 கிலோகிராம் முதல் 723 கிலோகிராம் வரையான குறைந்த வீச்சளவில் காணப்பட்டது.

(ii) ஒட்டுமொத்தமாக கூட்டுத்தாபனத்தின் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை அறுவடை 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 5 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அப்பெறுமதி 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது, மேலும் 5 தோட்டங்களில் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை அறுவடை 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக சிறிய அளவில் அதிகரித்திருந்ததுடன், 7 தோட்டங்களில் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை அறுவடை வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் செயற்திறன் மற்றும் வினைத்திறன் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(iii) 2014 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தி அண்ணளவாக 1,402,740 கிலோ கிராமாக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அது 1,511,788 கிலோ கிராமாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேயிலை உற்பத்தி 360,072 கிலோ கிராம்களால் அதாவது 8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இலக்கிடப்பட்ட உற்பத்தியான 2,275,935 கிலோ கிராம் அளவினை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது.

(iv) கூட்டுத்தாபனத்தின் தேயிலை பயிரிடப்பட்டுள்ள 2,839 ஹெக்டேயர் அளவிலான காணியின் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட வேண்டிய நியம தேயிலையின் அளவு 5,023,695 கிலோ கிராமாகும். எனினும், மீளாய்வாண்டில் அதில் 30 சதவீதம் அல்லது 1,511,788 கிலோகிராம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 மற்றும் மீளாய்வாண்டில் வெளித்தரப்பு பெருந்தோட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணி அளவு மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோட்டத்தின் பெயர் | 2015 காணி அளவு (ஹெக்டேயர்) | 2015 பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை உற்பத்தி (கிலோகிராம்) | 2014 காணி அளவு (ஹெக்டேயர்) | 2014 பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை உற்பத்தி (கிலோகிராம்) |
|---|---|---|---|---|
| அலகொல்ல | 56 | 6,384 | 56 | 6,765 |
| கொட்டகஹ | 202 | 9,422 | 267 | 26,974 |
| கோமர | 76 | 7,841 | 76 | 12,633 |
| ஹாகல | 130 | 13,278 | 134 | 17,662 |
| ஹெயாபார்க் | 156 | 23,244 | 17 | 32,529 |
| ஹுன்னஸ்கிரிய | 17 | 1,750 | 144 | 1,960 |
| கலேபொக்க | 128 | 23,740 | 128 | 15,282 |
| மிட்லேன்ட் | 27 | 2,742 | 27 | 3,030 |
| நிக்கொலஓய | 40 | 1,632 | 40 | 2,090 |
| ஓபல்கல | 52 | 1,825 | 52 | 1,717 |
| ரங்கல | 110 | 21,344 | 110 | 31,957 |
| மொத்தம் | **995** | **113,202** | **1,052** | **152,599** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிதரப்பு பெருந்தோட்டக்காரர்களால் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த பச்சை தேயிலை கொழுந்துகளுக்குரிய பூர்த்தி செய்யப்பட்ட தேயிலையான 152,599 கிலோகிராம் உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் உற்பத்தி 113,202 கிலோகிராம் ஆக இருந்தமையால் 39,397 கிலோகிராம்களால் அதாவது 26 சதவீதத்தினால் உற்பத்தி குறைவடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டில் வெளிபெருந்தோட்டக்காரர்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 995 ஹெக்டேயர் அளவிலான காணிகளின் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட வேண்டிய அளவு 1,727,818 கிலோகிராம்களாகும். எனினும், அதில் 7 சதவீதம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த காணி அளவு தொடர்பாக முகாமைத்துவத்தின் உரிய கவனம் செலுத்தப்படாததன் காரணமாக கூடிய விளைச்சலை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அதனை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 13 தோட்டங்களினதும் மதிப்பிடப்பட்ட உற்பத்தி இலக்குகளை அடைந்திராதிருந்ததுடன் 5 தோட்டங்களில் உள்ளவாறான உற்பத்தி இலக்கிடப்பட்ட உற்பத்தியின் 50 சதவீதமான மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) 2014 மற்றும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களின் ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திக் கிரயம் (COP) மற்றும் சாதாரண விற்பனைப் பெறுமதி (NSA) பின்வருமாறு இருந்தது.

| தோட்டத்தின் பெயர் | 2015 உற்பத்திக் கிரயம் | 2015 சராசரி விற்பனைப் பெறுமதி | 2015 பங்களிப்பு | 2014 உற்பத்திக் கிரயம் | 2014 சராசரி விற்பனைப் பெறுமதி | 2014 பங்களிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| அலகொல்ல | 382 | 252 | (130) | 345 | 270 | (75) |
| கொட்டகஹ | 653 | 242 | (411) | 659 | 287 | (372) |
| கல்பிஹில்ல | 332 | 252 | (79) | 317 | 269 | (48) |
| கோமார | 394 | 241 | (153) | 355 | 265 | (90) |
| ஹாகல | 394 | 238 | (156) | 353 | 284 | (69) |
| ஹெயாபார்க் | 588 | 241 | (347) | 410 | 264 | (146) |
| ஹுன்னஸ்கிரிய | 392 | 251 | (141) | 408 | 267 | (141) |
| கலேபொக்க | 454 | 232 | (222) | 536 | 311 | (225) |
| மிட்லேன்ட் | 537 | 265 | (272) | 507 | 328 | (179) |
| நிக்கலொஒய | 459 | 259 | (200) | 442 | 327 | (115) |
| ஓபல்கல | 386 | 267 | (119) | 349 | 332 | (17) |
| ரங்கல | 450 | 243 | (207) | 461 | 277 | (184) |
| வலஹன்துவ | 354 | 230 | (124) | 337 | 259 | (78) |

கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விற்பனை விலையை மிகைத்த உற்பத்திக் கிரயம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக நான்கு தோட்டங்கள் தவிர ஏனைய தோட்டங்களின் உற்பத்திக் கிரயம் அதிகரித்திருந்ததுடன் சராசரி விற்பனை விலை குறைவடைந்ததன் காரணமாக ஒவ்வொரு தோட்டத்தினதும் பங்களிப்பு மறை பெறுமதியை கொண்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டிற்குரித்தாக கூட்டுத்தாபனத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் வலஹன்துவ தோட்டத்தில் ஒரு கிலோகிராம் இறப்பர் பால் உற்பத்திக் கிரயம் (COP) மற்றும் சாதாரண விற்பனைப் பெறுமதி (NSA) பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | விளைச்சல் | NSA | COP | இலாபம்/ (நட்டம்) | வேறு வருமானம் |
|---|---|---|---|---|---|
| | கிலோகிராம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2010 | 50,165 | 364 | 206 | 7,971,169 | 758,257 |
| 2011 | 49,333 | 469 | 240 | 11,318,050 | 5,011,601 |
| 2012 | 39,219 | 378 | 289 | 3,405,404 | 352,698 |
| 2013 | 44,863 | 344 | 325 | 845,665 | 1,238,855 |
| 2014 | 40,741 | 259 | 337 | (3,097,683) | 295,148 |
| 2015 | 36,810 | 231 | 354 | (4,513,701) | 2,506,047 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டில் ரூபா 7,971,169 ஆக காணப்பட்ட இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 4,513,701 ஆன நட்டமொன்று வரை 05 ஆண்டுகளில் 157 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது. 2010 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக இறப்பர் விளைச்சல் 27 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தமை மற்றும் ஒரு கிலோகிராமின் உற்பத்திக் கிரயம் 72 சதவீதத்தினால் அதிகரித்தமை தொடர்பாக உயர்மட்ட முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 25 வயதினைக் கடந்த மரங்களின் எண்ணிக்கை 9,700 ஆக இருந்ததுடன் அது மொத்த மரங்களின் 50 சதவீதமாக இருந்தது. அனைத்து மரங்களும் 19 ஆண்டுகளை விஞ்சியிருந்ததுடன் 1996 ஆம் ஆண்டிற்கு பின்னர் 2010 ஆம் ஆண்டின் போது 1040 இறப்பர் மரங்கள் மாத்திரம் புதிதாக பயிரிடப்பட்டிருந்தன.

(iii) வலஹன்துவ தோட்டத்தில் ஒரு ஹெக்டேயரில் வழமையாக காணப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 33,150 ஆக இருந்த போதிலும், காணப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 62 சதவீதமாக இருந்தது.

(ஊ) 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் ஒரு ஹெக்டேயரில் சராசரி இறப்பர் உற்பத்தி 914 கிலோகிராம்களாக இருந்த போதிலும், வலஹன்துவ தோட்டத்தில் மீளாய்வாண்டில் பெற்றுக்கொண்ட உள்ளவாறான உற்பத்தி 35,582 கிலோகிராம்களாக இருந்தமையால் சராசரி இறப்பர் உற்பத்தி 547 கிலோ கிராம்களான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் உயர் முகாமைத்துவத்தின் கவனயீனம் காரணமாக 2013 யூன் 17 ஆந் திகதி முதல் 2009 ஒக்தோபர் 05 வரையான 74 மாதகாலப்பகுதியில் நியாயமான காரணங்கள் இல்லாமல் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தரின் சேவையை

கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ளாமல் அக்காலப்பகுதிக்காக சம்பளமாக ரூபா 611,284 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 மே 25 ஆந் திகதி தீயினால் சேதமடைந்த அலகொல்ல தொழிற்சாலையில் பழுதடைந்த பொருட்களை அப்புறப்படுத்துவதற்குரிய பெறுகை நடவடிக்கைகளுக்காகவும் உடைந்த பொருட்களைப் பாதுகாப்பதற்காகவும் காவலாளிகளை ஈடுபடுத்தியமைக்காக ரூபா 2,246,094 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், தற்போது இந்நடவடிக்கைக்காக மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பெறுகை செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் உடைந்த பொருட்கள் சேதமடைவதன் காரணமாக கூட்டுத்தாபனம் செலவழித்த பணத்தையேனும் பெறாது போகும் ஆபத்து நிலவுவதுடன் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செலவுகள் செய்ய நேர்ந்தமை தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 யூன் 07 ஆந் திகதி தீயினால் சேதமடைந்த கல்பீல்ல தேயிலை தொழிற்சாலையின் பழுதடைந்த பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அவற்றின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்திய காவலாளிகளுக்காக சம்பளமாக 2014 மற்றும் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் வரை ரூபா 1,130,077 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆகஸ்ட் மாதத்தின்போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது மிட்லன்ட் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 9,011 கிலோகிராம் தேயிலை இயந்திரங்களில் காணப்பட்ட செயற்திறனின்மை காரணமாக இரண்டு முறை உற்பத்திச் செயற்பாட்டிற்கு உட்படுத்தியதன் காரணமாக தொழிற்சாலை மின்சாரம், சம்பளம் மற்றும் ஏனைய செலவினங்களையும் மேலதிகமாக செலவிட நேர்ந்திருந்தது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டின் செப்தம்பர் 4 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கெலேபொக்க தேயிலை தொழிற்சாலையில் ரூபா 7,412,230 பெறுமதியான தீயூட்டப்பட்ட 31,770 கிலோகிராம் தேயிலை (Bulk Tea) காணப்பட்டது. கூட்டுத்தாபனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் இவ்வாறு தேயிலை இருப்பை வைத்துக் கொண்டிருப்பது பொருத்தமற்றதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வலஹன்துவ தோட்டத்தினுள் புதிதாக இறப்பர் பயிர்ச்செய்கைக்காக நிலத்தை தயார்படுத்துவதற்காக ரூபா 1,918,507 மற்றும் 250 மிளகு நாற்றுக்களை நடுவதற்காக ரூபா 59,410 செலவிடப்பட்டிருந்த போதிலும், நாற்றுக்கள் நடப்பட்டிருக்கவில்லை.

**3.4 பதவியணியினர் நிர்வாகம்**

கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் மற்றும் பதவியணியினர் ஆட்சேர்ப்பு நடைமுறை என்பவற்றை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 14 தோட்டங்கள், பிரதேச அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 5 தோட்டங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் 2 பிரிவுகளில் மாத்திரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வினால் தமது திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கோவைகளை பராமரித்தல் | மூல ஆவணங்கள் முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்படாமை. |
| (இ) | செயற்பாட்டு நிர்வாகம் | செயலாற்றலை அதிகரித்துக் கொள்வதற்குரிய தொழில்நுட்ப மற்றும் செயற்பாடுகளைப் பயன்படுத்தாமை. |
| (ஈ) | உள்ளக் கணக்காய்வு | உள்ளக் கணக்காய்வுத் திட்டம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமை. |